Registered as a Newspaper in Ceylon

விலைசதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற்பெட்டி எண்: 49

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி ஆனி 11 ஆம் நாள் ஸபர் 13 (24-6-64) புதன்கிழமை இதழ் 136

ஈழநாடு
சந்தா விபரம்

இந்தியா — இலங்கை

| | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
|---|---|---|
| 1 வருடம் | 48-00 | 13-00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |


# ‘சமஷ்டி கொள்கையில் மாற்றம் எதுவும் இல்லை’

## நிலைமையை மக்களுக்கு உணர்த்தவே பதவி துறப்பு

### திரு. அமிர்தலிங்கம் விளக்கம்

யாழ்ப்பாணம், புதன்

“தமிழரசுக்கட்சி சமஷ்டிஆட்சி அமைப்புக் கோரிக்கையைக் கைவிடவில்லை. அதன் அடிப்படைக் கொள்கையிலும் மாற்றஞ் செய்யவில்லை. மாற்றம் செய்யும் உரிமை கட்சியின் மத்திய செயற்குழுவுக்குக் கிடையாது” என்று வட்டுக்கோட்டை எம். பி.யும தமிழரசுக்கட்சிப் பிரமுகருமான திரு. அ. அமிர்தலிங்கம் பதவி துறப்புத் தீர்மானத்துக்கு விளக்கம் தெரிவிக்கையில் தெரிவித்தார்.

பார்லிமெண்ட் ஸ்தானங்களை ராஜினுமாச் செய்து சுயநிர்ணய உரிமைப் போராட்டத்துக்குத் தயார் செய்ய வேண்டுமென்றும் மக்களிடம் புதிய கட்டளை பெற வேண்டுமென்றும் தமிழரசுக்கட்சியின் செயற்குழு சென்றவார இறுதியில் நிறைவேற்றிய தீர்மானம் சரியாகத் தங்களுக்குப் புரிந்து கொள்ள முடியாமலிருப்பதாக யாழ்ப்பாணப் பகுதியைச் சேர்ந்த தமிழரசுக் கட்சி எம். பி.க்கள் சிலர் தெரிவித்தனர். செயற்குழுத் தீர்மானம்பற்றி பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினத்திடம் கேட்டபொழுது தாம் செயற்குழுக் கூட்டத்துக்குச் செல்லவில்லையென்றும் தீர்மானம் தமக்கு விளங்கவில்லையென்றும் கூறினுர். ஆனல் பதவி துறக்க வேண்டுமென்ற மத்திய கமிட்டியின் உத்தரவை தாம் ஏற்று ராஜினுமாச் செய்யத் தயாராக இருப்பதாகவும் கூறினுர்.

**அமிர்தலிங்கம் விளக்கம்**

செயற்குழுத் தீர்மானம் பற்றி திரு. அமிர்தலிங்கத்திடம் விளக்கம் கேட்டபொழுது அவர் பின்வருமாறு தெரிவித்தார்.

தேர்தலில் வாக்களித்து பிரசெய்து அனுப்பினுர்களென்று திரிதிகளைத் தெரிவு செய்து அனுப்பியதும் தங்களுடைய கடமை முடிந்துவிட்டதென்றும் உரிமைகள் கிடைத்து விடுமென்றும் எமது மக்கள் கருதுகிருர்கள். இக்கருத்துத் தவருனதென்றும் உரிமைப் போராட்டத்துக்கு பார்லிமெண்ட் மட்டும் போதாதென்றும் மக்கள் போராட்டம் நடத்த வேண்டியது அவசியமென்றும்மக்களுக்கு உணர்த்தி அவர்களது ஒத்துழைப்பைப் பெறுவதுடன் அவர்களை உற்சாகப்படுத்தவே எம். பி. பதவிகளை தமிழரசுக் கட்சி எம். பி.க்கள் துறக்கவேண்டுமென்று மத்திய செயற் குழு தீர்மானம் மூலம் கூறுகிறது.

சுய நிர்ணய உரிமை அடிப்படையில் சமஷ்டி பெறும் கோரிக்கையும் ஒன்று. இதற்கு உத்தரவிடுவது தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமை.

சென்ற தேர்தல்களில் சமஷ்டிக் கோரிக்கையையும் மொழி உரிமைக் கோரிக்கையையும் முன்வைத்தே நாம் தேர்தலில் போட்டியிட்டோம். மக்களும் அதற்காகவே எங்களைத்தெரிவு செய்தனர். ஆனால் 1960-ம் ஆண்டிலிருந்தசூழ்நிலையும் இப்போதுள்ள சூழ்நிலையும் வித்தியாசமானவை.

1960-ம் ஆண்டு மார்ச் மாதத் தேர்தலுக்குப்பின் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சிக்கும்

(6-ம் பக்கம் பார்க்க)

## கிரிக்கெட் டெஸ்ட்

லார்ட்ஸ், ஜூன் 23

இங்கிலாந்துக்கும் ஆஸ்திரேலியாவுக்குமிடையே நடைபெற்ற கிரிக்கெட் டெஸ்ட் மழை காரணமாக இன்றும் (இறுதி நாள்) பாதிக்கப்பட்டது.

இங்கிலாந்து தனது முதல் இன்னிங்ஸில் 246 ஓட்டங்கள் எடுத்திருந்தது. ஆஸ்திரேலியா தனது முதல் இன்னிங்ஸில் 176 ஓட்டங்களும் இரண்டாவது இன்னிங்ஸில் 4 விக்கட்டுகள் நஷ்டத்துக்கு 168 ஓட்டங்கள் எடுத்தது. மழை காரணமாக கிரிக்கெட் டெஸ்ட் தடைப்பட்டது.

## கல்வித்துறையில் பாகுபாடு காண்பிக்கப்படக்கூடாது

### இன்று நடைபெறும் மாணவ மகாநாட்டுக்கு வரும் பிரேரணை

யாழ்ப்பாணம், புதன்

இன்று யாழ்ப்பாண நகர மண்டபத்தில் நடைபெறவிருக்கும் அகில இலங்கை மாணவ மகாநாட்டில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் சில பிரேரணைகள் வருமாறு:-

எமது பெற்ருேரின் பணம் எமதுகல்விக்காக எம்மில் மூலதனமிடப்படுகிறது. பிற்போக்கான கல்வித் திட்டம் தாய் நாட்டின் முன்னேற்றத்திற்குப் பயனற்றதாக இருக்கிறது. கல்வி பயிலும் இளைஞர்கள் வேலை கிடைக்கும் முயற்சியிலேயே தமது கவனத்தை செலவிட வேண்டியிருக்கிறது. ஆனல் அவர்களுக்கு வேலை கிடைப்பதில்லை. இதன் காரணமாக அவர்களது ஆற்றலும் திறமையும், பணமும் வீணுக்கப்படுகிறது. தேசத்தின் முன்னேற்றம் இதனல் பாழடிக்கப்படுகிறது. எனவே படித்து விட்டு வேலையற்றிருக்கும் வாலிபருக்கு உடனடியாக வேலை வழங்கும்படி இம்மகாநாடு வற்புறுத்துகிறது.

கல்வி முறையில்ஒருபோதும் வித்தியாசமிருக்கக் கூடாது. மாணவருக்கிடையிலும், பாடசாலைகளுக்கிடையிலும் ஏற்றத்தாழ்வு காட்டப்படக் கூடாது. எல்லாவற்றிலும் சமபோட்டி நிலைமை ஏற்பட வேண்டும்.

நாளுக்கு நாள் வாழ்க்கைச் செலவுகள் அதிகரித்துக் கொண்டு வருகின்றன. பெற்ருேர்கள் இலவசக் கல்விக்கு தமது பிள்ளைகளை அனுப்பும் போதும் வசதிப்பணம் என்ற பெயரில் சில பாடசாலைகள் அதிக பணம் வசூலிக்கின்றன. இவ்வித அநீதியான முறை உடனே நீக்கப்பட வேண்டும்.

தனித்தியங்கும் பாடசாலைகள் பணம் சம்பாதிக்கும் நோக்கம் கொண்டுள்ளன. எனவே இத்தகைய பாடசாலைகளை உடனடியாக அரசாங்கம் கையேற்க வேண்டும்.

## இராணுவத் தாக்குதல் பற்றி ஸ்தலத்தில் விசாரணை

### தகுந்த நடவடிக்கை எடுப்பதாக அரசாங்க அதிபர் வாக்குறுதி

வல்வெட்டித்துறை, செவ்

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த பிறவி ஊமையான விநயகசுந்தரம் என்பவரின் மனைவியான மகாலட்சுமியை இராணுவ சிப்பாய் ஒருவர் கட்டிப்பிடித்து பலாத்காரம் செய்ய முயன்ருரென்றும், அந்த இராணுவ சிப்பாயை அடையாளம் காட்ட முடியுமென்றும், இராணுவ தாக்குதல் சம்பந்தமாக, வல்வெட்டித்துறை பட்டினசபை காரியாலயத்தில் நடைபெற்ற உத்தியோகபூர்வமான விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது.

இவ்விசாரணையை யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் திரு. நெவில் ஜெயவீரா இன்று காலை நடாத்தினுர். இராணுவ சிப்பாய்களின் கொடுமைகளுக்கு ஆளானதாகக் கூறப்படும் பலர் வாக்குமூலமளித்தார்கள்.

பட்டினசபைக்குச் சொந்தமான ‘லைட்டை’ சேதப்படுத்தியதாகவும், வள்ளங்களில் கொண்டுவரும் மீன்களைப் பலாத்காரமாக எடுத்ததாகவும், யாருமில்லாத சமயங்களில் வீடுகளில் புகுந்து பொருட்களை எடுத்துச் சென்றதாகவும் இராணுவ சிப்பாய்கள்மீது குற்றம் சுமத்தப்பட்

(6-ம்பக்கம் பார்க்க)

## முதன் மந்திரிகள் மகாநாடு

சென்னை, ஜூன் 23

டில்லியில் நாளை இந்தியப் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரியின் தலைமையில் ராஜ்ய முதன் மந்திரிகள் கூடி விவாதிக்கவிருக்கும் உணவு நிலை பற்றிய மகாநாட்டில் தமிழ் நாடு முதலமைச்சர் சார்பில் தொழில்மந்திரி வெங்கட்ராமனும், உணவு மந்திரி திரு. மன்ருடியாரும் கலந்துகொள்வதற்காக இன்று விமானம் மூலம் டில்லி போய்ச்சேர்ந்தார்கள்.

இந்த மகாநாடு இரு தினங்கள் நடைபெறும். நாட்டை எதிர்நோக்கியுள்ள உணவுப் பிரச்னைக்கு, உடனடியான தீர்வும் நீண்டகால திட்டமும் இம் மகாநாட்டில் ஏற்படுமென்று அறிவிக்கப்படுகிறது.

## குருஷ்சேவை கடத்த முயற்சி

ஸ்டாக்ஹோம், ஜூன் 23

சுவீடனுக்கு விஜயம் செய்திருக்கும் சோவியத் பிரதமர் குருஷ்சேவை கடத்திக் செல்ல மேற்கொள்ளப்பட்ட ஒரு முயற்சியை சுவிடிஷ் பொலிஸார் முறியடித்தனர். இது சம்பந்தமாக ஒரு வெளிநாட்டுக் காரரும், மற்றும் மூவரும் கைது செய்யப்பட்டிருக்கிருர்கள்.

வேறு எவருக்கும் இதுவரை அளிக்கப்படாத அளவு பிரம்மாண்டமான பந்தோபஸ்து ஏற்பாடுகளை பொலிஸார் செய்திருந்தனர் என்பது ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதே சமயம் குருஷ்சேவைக் கொலை செய்ய வேண்டும் என சுவீடனிலுள்ள கம்யூனிஸ்ட் எதிர்ப்புக்காரர்கள் சமீபத்தில் துண்டுப்பிரசுரங்கள் விநியோகித்திருந்தனர்.

சுவீடன் அநேகமாக ஐரோப்பாவிலேயே வாழ்க்கைத்தரம் உயர்ந்த நாடு. திரு. குருஷ்சேவ் இங்கொரு கூட்டத்தில் பேசும் போது ஓரளவு அணு ஆயுதத் தடை ஒப்பந்தம் ஆயுதப் பரிகரணத்துக்கு ஒரு பிரதான முன்னேடி எனக் கூறினர்.

சுவிடிஷ் பிரதம மந்திரி, இக் கூட்டத்தில் பேசும் போது திரு. குருஷ்சேவ் உலகத்தின் தலைவிதியை நிர்ணயிக்கும் மாபெரும் பிரம்மாக்களில் ஒருவர் என்று குறிப்பிட்டார்.

## மணிவாக்கு

அடக்கம், தனியாக அனுசரிக்கப்பட வேண்டிய ஓர் ஒழுக்கமாக இருக்க முடியாது. ஏனெனில் வேண்டுமென்றே அனுசரிக்கப்படுவதற்கு அது தன்னை விடுவதில்லை. என்றாலும் அஹிம்சைக்கு அது இன்றியமையாத பரீட்சை.

— மகாத்மாகாந்தி

ஈழநாடு

EELA NADU

EELA NADU National Tamil Daily, Post Box 49, Jaffna
Telegram: EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு
ஆனி ௴ 11 ௳ (24-6-64)

# தேசிய ஒற்றுமை

இலங்கையில் தமிழ்பேசும் மக்கள் புறக்கணிக்கப்பட்டு அவர்களின் உரிமைகள் தொடர்ந்து மறுக்கப்பட்டு வந்தால் அதன் விளைவு எத்தகையதாக இருக்கக்கூடுமென்பதற்கு தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுவின் தீர்மானமும் ஈழம் முன்னணித் தலைவர் திரு. சுந்தரலிங்கம் வெளியிட்டுள்ள கருத்தும் முன்னெச்சரிக்கையாகும். மொழி, குடியுரிமை முதலிய சட்டங்களினாலும் நிர்வாக ரீதியில் தமிழ் மக்களுக்கு எதிராக பாகுபாடு காட்டப்பட்டு வந்ததனாலும் தமிழ்பேசும் மக்களின் ஒத்துழைப்பையும் ஆதரவையும் அரசாங்கம் இழந்தது. தமிழ்பேசும்மக்களின் எதிர்ப்பு இயக்கங்களினாலும் அரசாங்க நிர்வாகம் சீர்குலைந்து பொருளாதார நெருக்கடி மிக மோசமான கட்டத்தை அடைந்திருக்கிறது. கூட்டு அரசாங்கம் அமைத்தாலும் அபிவிருத்தித் திட்டங்கள் பலவற்றைத் தீட்டினாலும் தமிழ்பேசும் மக்களின் ஒத்துழைப்பும் ஆதரவும் இல்லாதவரை நாடு முன்னேற முடியாதென்பதை திரு. வில்மட் பெரேரா போன்ற நிதானபுத்தியுள்ள சிங்களத் தலைவர்களே வெளிப்படையாகக் கூறியிருக்கின்றனர். இதுவரை அரசாங்கம் சிறுபான்மையினர் உரிமை சம்பந்தமாக உறுதியான நடவடிக்கை எதுவும் எடுக்காதது தமிழ்பேசும் மக்கள் மத்தியில் ஐயத்தையும் அச்சத்தையும் துவேஷத்தையும் ஏற்படுத்துவதை தவிர்க்க முடியாது. சிறுபான்மையினருக்கு உரிமைகள் வழங்கப்படுமென்றும் அவர்கள் நியாயமாக நடத்தப்படுவார்களென்றும் அரசாங்கம் பலதடவைகளிலும் வாக்குறுதியளித்துள்ளபோதிலும் செயலில் எதுவும் நிறைவேற்றப்படவில்லை, தமிழரசுக்கட்சியின் செயற்குழுத் தீர்மானம் போதிய கால அவகாசத்துடன் வெளிவந்துள்ளதால் அதையொருமிரட்டலாக அரசாங்கம் கருதக்கூடும். இதற்கு முன் நடந்து கொண்டது போல் சிம்மாசனப் பிரசங்கத்தில் சிறுபான்மையினர்உரிமை பற்றி நான்கு வார்த்தைகள் கூடுதலாகச் சேர்ப்பதன் மூலம் தமிழரசுக் கட்சியைச் சமாதானப்படுத்தலாமென்றும் அரசாங்கம் கருதலாம், என்றாலும் தமிழ்பேசும் மக்கள் இனியும் இந்த வாக்குறுதிகளை நம்புவார்களென்று அரசாங்கம் எதிர்பார்ப்பது தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்வதாகவே முடியும்.

தமிழரசுக்கட்சி நாட்டைப் பிரிக்க முயற்சி செய்கிறதென்று சிலசமயங்களில் அரசாங்கமே பிரசாரம் செய்திருக்கிறது. "நாட்டைப் பிரிப்பது நமது நோக்கமல்ல. உடனிருந்து வாழ்வதே நமது கொள்கை" என்று அது பல தடவைகளிலும் கூறிவந்துள்ளது, ஆனால் சென்றவார இறுதியில் செயற்குழு நிறைவேற்றிய தீர்மானத்தில் "இனி உடனிருந்து வாழ முடியாது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது அரசாங்கம் தீவிரமாக சிந்திக்க வேண்டியது. "நாடு பிரிந்தேயாக வேண்டும்" என்று திரு. சுந்தரலிங்கமும் குரல் எழுப்புகிறார். வாக்குறுதிகளை நம்பி ஏமாந்தவர்கள் வேறுவழியில்லாமல் 'பிரிவினைக் குரலுக்கு' ஆதரவளிக்க முன்வரக்கூடும். நாளுக்குநாள் ஒரே அம்சமாகி வரும் இந்த உலகத்திலே தனிநாடு, பிரிவினை என்பதை எவரும் விரும்பமாட்டார்கள். விரும்பக்கூடியதுமல்ல. என்றாலும் அத்தகைய நிர்ப்பந்தமான சூழ்நிலையை ஏற்படுத்தாமல் கவனித்துக் கொள்ள வேண்டியது அரசாங்கத்தின் கடமை. தேசிய ஒற்றுமை வெறும் பேச்சினாலும் வாக்குறுதிகளினாலும் ஏற்பட்டுவிடாது. நிலைமை மிஞ்சிப் போவதற்குமுன் அரசாங்கம் சிறுபான்மையினரின் உரிமை விஷயத்தில் உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும். வெள்ளம் தலைக்குமேல் போனபின் அணை கட்டிப் பயனில்லை வருமுன் காப்பதே அறிவுடைமை. பிரிவினைச்சக்திகளுக்கு இடம் கொடுப்பது விளையாட்டாக இருக்கமாட்டாது. பிரதமர் முன்னர் உத்தேசித்தபடி உடனடியாக சர்வகட்சி மகாநாட்டைக்கூட்டி தமிழ்பேசும் மக்களின் குறைகளை நீக்கவும் அவர்களுடைய பிரச்னைகளுக்கு சுமுகமான, நிரந்தரமான தீர்வு காணவும் வழிகாணவேண்டும்.

# கல்விக்கூடம் அமைத்து தமிழ், சைவம் வளர்த்தபெரியார்

## மகாஜனக்கல்லூரி ஸ்தாபகர் துரையப்பாபிள்ளை நினைவுதினம்

— நா. மயில்வாகனம் —

தமிழுக்கும், சைவத்திற்கும் தொண்டாற்றி ஆசானாகவும் அதிபராகவும் கல்லூரி ஸ்தாபகராகவும் கவிஞர் பெருமானாகவும் வாழ்ந்து மறைந்த தெல்லிப்பழை திரு. துரையப்பாபிள்ளை அவர்களையும், அவர்களது நன்னோக்கத்தையும் எடுத்தியம்பிக்கொண்டு நிற்கின்றது அவரால் நிறுவப்பட்ட மகாஜனக் கல்லூரி. அன்னாரின் நினைவு நாளைக் கொண்டாடும் இன்றைய தினத்தில் அவரின் கவித்துவத்தையும் சேவையையும் நினைவுறுத்துவது சாலப் பொருத்த முடையதாகும்,

மக்களுக்காகவே தமது வாழ்வை அர்ப்பணித்த பிள்ளை அவர்கள் தாம் கல்வி பயிலுங் கால் ஜே. ஆர். ஆனல்ட் என்ற தமிழ் அறிஞருடன் நெருங்கிப் பழகியதன் பயனாகத் தாம் பெற்ற அனுபவங்களும் அறிவுமே தம்மைப் பின்பு கவிஞனாக மாற்றியது என்பதை உணர்ந்துபோலும் தாம் யாத்த கீதரசமஞ்சரி என்னும் நூலை அன்னாருக்கு அர்ப்பணித்தார்.

பிள்ளையவர்களின் பக்தியுணர்ச்சியும் ஈடுபாடும் அவரால் இயற்றப்பட்ட சிவமணிமாலையில் பரக்கக் காணமுடிகின்றது. திருமுறைகளில் அவருக்கிருந்த ஈடுபாடும் அவற்றின் மேல் அவர் கொண்டிருந்த ஆய்வுறுந்தன்மையும் பல இடங்களில் நன்கு தெளிவாகின்றது.

"தேனே கரும்பின் தெளிவே
சுவைமிகுந்தெள்ளமுதே
தானே தனக்கு நிகராயொளி
ருந்தயா நிதியே
ஐம்புல ஞற்றங்கரை மரமாயிங்
கலைதலுற்றேன்"

என்பன போன்ற அடிகள் அன்னருக்குத் திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம் போன்ற திருவாசகப் பதிகங்களில் உள்ள ஈடுபாட்டினை வெளிப்படுத்துகின்றது.

கவிஞரின் கவித்துவம் அக்கால சூழ்நிலைக்கமையவே அமைந்துள்ளது. அவரின் வாழ்க்கையும் அவரின் கற்பனைப் போக்கினை மாற்றியமைப்பனவாகக் காணப்படுகின்றது. மக்கள் மனத்தில் தம் கருத்துக்கள் நன்கு வலியுறுத்தப்படவேண்டும் என்ற நோக்கம் கொண்ட கவிஞர் மக்களிடையே செல்வாக்குப் பெற்றிருந்த பதங்கள் கீர்த்தனைகள் கும்மிகள் ஆகிய சந்தப் பாக்களிலேயே தமது கவிதைகளில் பெரும்பாலானவற்றை இயற்றினார். அவரின் சீர்திருத்தக் கருத்துக்கள்மூலம் அக்காலப் பண்பாட்டினையும் ஒழுக்க முறைகளையும் நம் மனக்கண் முன் கொண்டுவந்து நிறுத்திவிடுகின்றார்.

"குண்டான் வழித்திடும்
பெண்களுக்குக் கல்வி
கூடாதெனச் சொன்னதக்
காலம்"

எனப் பெண்கள் கல்வியின் அவசியத்தையும்,

"தாயினும் புத்திரன் தான்
சாதிமானெனச்
சாற்றிப் பெருமைகொள்ளிக்
காட்டில்
தேயம் பெருகி நம் சாதியின்
ஐக்கியம்
நீடுதல் கூடுமோ சங்க
மின்னே"

எனச் சாதிக் கொடுமையையும் சாற்றுகிறார். கிறிஸ்து மதத்தவராய் இருந்தபோது சமயச் சார்பற்றனவும் ஒழுக்கத்தைப் புலப்படுத்துவனவாயுமான பல கீர்த்தனைகளைப் புனைந்தார்.

சகலகுண சம்பன்னன் என்ற இவரால் இயற்றப்பட்ட நாடகம் பல நீதிக் கருத்துக்களை வெளிப்படுத்துகின்றது. இந் நாடகக் கதாநாயகனை சகலகுண சம்பன்னன் என்ற வணிக குலத் தலைவனின் வாழ்க்கை இன்றைய மக்களையும் நெறிப்படுத்தும் தன்மை வாய்ந்ததுவாய்க் காணப்படுகிறது. தனது செல்வத்தையே கொடுத்து அனாதைப் பெண்களைப் பேணுகின்ற சகலகுண சம்பன்னன் வாழ்க்கை இன்று நம் சமுதாயத்திலுள்ள சுயநல பேணிகளுக்கு சம்மட்டி அடியாக அமைந்துள்ளது.

மகாஜனக் கல்லூரியினர் பிள்ளையவர்களின் கவிதைத் தொகுப்பைச் சில வருடங்களுக்குமுன் வெளியிட்டனர். இதனைப் பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் முத்தமிழ் இலக்கியமென "சோலை இயலாய் இசையாய் நாடகமாய்நிறைவுறுகின்றதுஎன்றுள்ளார். எனினும் பிள்ளை அவர்களது வாழ்க்கையையும் அவரினது சேவையையுங்கொண்ட தனித்த நூல் ஒன்று வெளிவருவது மிக அவசியமானதொன்றாகும். இப்பணியினையும் மகாஜனக் கல்லூரியினர் விரைவில் நிறைவேற்றுவார்களென எதிர்பார்க்கலாம்.

## எதியோப்பிய சக்கரவர்த்தி

கம்பாலா, ஜூன் 23

தென்ரொடீஷியாவில் ஒருதரப்பு ஆட்சியினால் ஏற்படும் விளைவுகளுக்கு பிரிட்டன் தான் பொறுப்பு என எதியோப்பிய சக்கரவர்த்தியும், உகண்டா பிரதமரும் எச்சரிக்கை செய்திருக்கிறார்கள்.

# வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தீர்த்தோற்சவம்

— த. இராசரத்தினம் —

(செயலாளர் அ. இ. பொதுஜன சேவைச்சங்கம்)

இலங்கையின் வடபாகமாகிய யாழ்ப்பாண நகரில் கி.பி. 948-ல் சிங்கை ஆரியன் என்னும் மன்னன் வண்ணை நல்லூரிற் பல ஆலயங்களைக் நிர்மாணித்தான். அவன் அரண்மனைக்கு மேற்கே வண்ணை வீரமாகாளி அம்மன் கோவிலை ஸ்தாபித்து வழிபட்டு வந்தான். அவன் சேனைசனியங்களுடன் புறப்படும்பொழுது வீரமாகாளி அம்மையை வழிபட்டு நற்பயனெய்தினன்.

போர்த்துக்கேயர் இலங்கையைக் கைப்பற்றிய பின்னர் அநேக சிவாலயங்கள் அவர்களால் தகர்த்தெறியப்பட்டன. அவ்விதம் தகர்த்தவர்கள் இப்பொழுது உலகில் ஒரு மூலையில் ஒதுங்கியிருக்கின்றனர். சைவசமயச் சின்னங்களையும் ஆலயங்களையும் டச்சுக்காரர் எவ்விதம் தகர்த்தெறிந்தனரோ அவ்விதம் அவர்களும் ஒதுக்கப்பட்டனர். அவ்விதமே இக்காலத்திலும் யாரொருவர் சிவசின்னங்களைத்தரித்தோரை ஏளனஞ் செய்கின்றனரோ அன்னோர் நாளடைவில் அவனருளால் தண்டிக்கப்பட்டு விசனமடைவர்.

வீரமாகாளி அம்மன் ஆலயம் அற்புதம் வாய்ந்தது. அன்றுமுதல் இன்றுவரை பரம்பரைச் சைவக் குருக்கள்களே இவ்வாலயத்தைப் பரிபாலித்து வருகின்றனர். இங்கு மகோற்சவங்கள் இருபத்தைந்றது.

தாக இப்பொழுது நடைபெறுகின்றது. இவ்வாலயத்தில் வேண்டிய வாகனங்கள் யாவும் சிற்பத் திறமைவாய்ந்த காலஞ்சென்ற விஸ்வப் பிரமஸ்ரீ ஆறுமுகம் அவர்களால் செய்யப்பட்டவை. இவ்வாலயத்தை ஸ்ரீ ஆறுமுகம் ஆரம்பிக்கும் பொழுது அவரது கைகள் செயற்படாமலிருந்தன. ஆனால் வேலை ஆரம்பித்துக் கொண்டு செல்லும்பொழுது அவரது கைகள் தாமாகவே செயற்பட்டு சொற்பகாலத்துள் அந்த ரதத்தை நிறைவேற்றக் கூடியதாயமைந்தது. பின்னர் அந்த ரத வெள்ளோட்டவிழாவிலன்று வீதிவலம் வந்த பொழுது ஒரு வயதடைந்த மூதாட்டி ஸ்ரீ ஆறுமுகத்தின் எதிரில் தோன்றித் தக்ஷிணை வழங்கி அற்புதமாக மறைந்துவிட்டார். அவ்விதமாகப் பல அற்புதங்கள் வருடந்தோறும் நிறைவேறும். இத்தேவாலயத்தில் பூஜைகள் கிரமந் தவறாது நிறைவேறுகின்றன. மகோற்சவங்கள் பக்தகோடிகளால் நிறைவேற்றப்படுகின்றன. ஒவ்வோர் திங்கட்கிழமைகளிலும் இங்கு நல்லூர் பஜனைச் சபையினர் மாலை 7 மணி முதல் 8 மணிவரை பஜனை நிகழ்த்திவருகின்றனர்.

நேற்று 23-6-64-ல் ரதோற்சவம் நிறைவேறியது. இன்று தீர்த்தோற்சவம் நடைபெற்றது.

# ஐயாறன் எழுதுவது

மன்னிக்க வேண்டும். இரண்டே வாரங்களில் திரும்பிவிடவேண்டுமென்றுதான் இந்தியா சென்றேன். கிட்டத்தட்ட ஒரு மாதமாகிறது. இப்போதும்கூட திரும்ப மனமே இல்லை. சிறைச்சாலையில் அடைபட யாருக்குத்தான் மனமிருக்கும்?

கொழும்பிலிருந்து சென்னை வரை ரயிலில் 'ரிடர்ன் டிக்கெட்' வாங்கிச் சென்றேன். நிபந்தனை என்னவென்றால் வாங்கிய 30 நாட்களுக்குள் கொழும்புக்குத் திரும்பிவிட வேண்டுமென்பது. இந்த டிக்கெட் வாங்கிச் சென்றால் எந்த ஸ்டேஷனிலும் இறங்கி ஏறலாம். எந்த இடத்திலும் தங்கிச் செல்லலாம். சாதாரண டிக்கெட் வாங்கினால் 100 மைல்களுக்கு ஒரு நாள் வீதம் தான் இடையில் தங்கலாம். ரிடர்ன் டிக்கெட் வாங்கியதால் கூடுமானவரை பல க்ஷேத்திரங்களையும் தரிசிக்க முடிந்தது. இந்த 'சான்ஸ்' விட்டால் இனி எப்போது?

* * *

அன்று மாலை சுமார் 4 மணி இருக்கும், இராமநாதபுரத்தில் ரயில் நின்றபோது, நேருஜியைப் பற்றிய செய்தியைக் கேட்டு திடுக்கிட்டேன். பேரிடி விழுந்ததுபோல் இருந்தது. அங்கு பல பல கட்சிக்கொடிகளையும் துக்கத்துக்கும் மரியாதைக்கும் அறிகுறியாகத் தாழப்பறக்க விட்டிருந்தனர். ஊருக்கு ஊர் தெருவுக்குத் தெரு காங்கிரஸ், தி. மு. க., தி. க., கம்யூனிஸ்ட், சுதந்திரா முதலிய கட்சிக்கொடிகள் நீண்ட மூங்கில்களிலே தாழப் பறந்தன. மனதிலிருந்த மகிழ்ச்சி எல்லாம் ஒரு நொடியில் மாறி ஏதோ செத்தவீட்டுக்கு வந்ததுபோலிருந்தது. ஒன்றுமே பேசத் தெரியவில்லை.

* * *

மதுரை வந்தேன். கடைகளெல்லாம் மூடிக்கிடந்தன, வண்டிகள் ஓடவில்லை. சைக்கிள் ரிக்ஷாக்காரர் ஒருவர் நேருவின் படத்தை தம் ரிக்ஷாவில் வைத்து, பூமாலைகளால் அலங்கரித்து, ஊதுபத்திகளை ஏற்றி கைகூப்பி, கண்ணீர் விட்டுக்கொண்டு நின்றார். பல பல இடங்களிலும் இவ்வித காட்சிகளைக் கண்டேன்.

ஓரிடத்தில் பெரிய கூட்டம். அது ஒரு பெரிய ஓட்டல். அக்கடையை மூடாதிருந்ததால், சிலர் அக்கடைக்குள் சென்று 'சர்வர்'களை அடித்து, கடையை மூடும்படி செய்தனராம். மதுரையிலே ஓட்டல்களை நம்பி வாழ்பவர் கணக்கற்றவர்கள். அன்று திடீரென மாலையில் கடைகளை எல்லாம் மூடிவிட்டதால், பல்லாயிரக்கணக்கானவர்கள் பட்டினி கிடக்க நேரிட்டது.

நெருங்கிய பந்துக்கள் இறந்தால், தமிழகத்தில் சிலர் மொட்டையடித்துக்கொள்வது வழக்கம்.

நேருவின் பிரிவுக்கு துக்கம் தெரிவிக்க அங்கு பலர் மொட்டை அடித்துக்கொண்டனர். இந்த மொட்டைக்கு 'சலூன்'காரர்கள் காசு எதுவும் பெறவில்லையாம். பல்லாயிரவர் மௌன ஊர்வலமாகச் சென்றனர். என்றும் கல்யாணம்போல் காட்சி அளிக்கும் மதுரை அதன் பொலிவை இழந்து ராமனைப் பிரிந்த அயோத்திபோல் அழுது கொண்டிருந்தது.

* * *

பிறையும் நெடுநீரும் பிரியா
முடியினர்
மறையும் பல்பாடி மயானத்
துறைவாரும்
பறையும் அதிர் குழலும்
போலப்பல வண்டாங்
கறையும் வடு கூரில் ஆடும்
மடிகளே

— திருஞானசம்பந்தர்

# "லாவோஸ், வியட்னமில் கம்யூனிஸ்ட் வென்ருல்

## ஆஸ்திரேலியாவுக்கும் அது ஆபத்தாய் முடியும்"

— டெயிலிடெலிகிருப்

லண்டன், ஜூன் ஆஸ்திரேலியா உட்பட தென் கிழக்கு ஆசியாவைப் பாதுகாக்க அமெரிக்கா உறுதி கொண்டிருப்பதின் விளைவே, லாவோஸ் பற்றி அது எச்சரிக்கையும், ராணுவ ஆயத்தமும் செய்து வருவதற்குக் காரணம் என, "டெயிலி டெலிகிருப்"பத்திரிகை கூறுகிறது.

லாவோஸில் பதட்லாவோக்களும், தென்வியட்னமில்வியட்காங்குகளும் இரு முனையில் நடத்தும் தாக்குதல்கள்வெற்றி பெற்ருல் ஏற்படக் கூடிய அபாயம்பற்றி இந்த கன்சர்வேட்டிவ் பத்திரிகை எச்சரித்திருக்கிறது.

"கம்யூனிஸ்டுகள் இந்த இருமுனைத் தாக்குதலில் பூரண வெற்றி பெற்ருல் ஸயாம் நாட்டுக்கும் ஆபத்து ஏற்படும். இதன்மூலம் இந்தியாவுக்கு கம்யூனிஸ்டுகள் வழி திறந்து விடுவார்கள். இந்தோனேஷியா ராணுவ பலம்பெறுவதும், மலேஷியா நசுக்கப்படுவதும் இறுதியில் ஆஸ்திரேலியாவுக்கு ஆபத்தாய் முடியும். இதன் காரணமாகத்தான் அமெரிக்கா யுத்த ஆயத்தங்களைத் தீவிரப்படுத்தியிருக்கிறது" என்றும் இப் பத்திரிகை கூறுகிறது.

வியட்னமில் கம்யூனிஸ்ட் தாக்குதலை நிறுத்தி, லாவோஸில் அவர்கள் வாபஸ் பெற்ருலொழிய சமாதானப் பேச்சுவார்த்தைக்கு இடமில்லை. இதுவே குறைந்தபட்ச நிபந்தனை என்பதைத் தெரிவித்துவிடவேண்டும்" என்றும்டெயிலி டெலிகிருப் கூறியிருக்கிறது.

# ஜனதிபதியும் நட்சத்திரங்களும்

லாஸ்ஏஞ்சலஸ், ஜூன் 23 தலைக்கு 500 டாலர் கட்டணம் விதிக்கப்பட்ட உணவு, நடன விருந்தில் கலந்து கொண்ட அமெரிக்க ஜனதிபதி ஜோன்ஸன் நள்ளிரவு 1-30 வரை ஹாலிவுட் சினிமா நட்சத்திரங்களான பிரேங்க் சினத்ரா, கிரகரிபெக், ஜேக்ஸன்னி ஆகியோருடன் அளவளாவிக் கொண்டிருந்தார்.

ஜனநாயகக் கட்சி நிதிக்காக நடைபெற்ற இந்த நடனத்தில் ஓலிவிபால், டைனஷோர், டெபிஜேனல்ட்ஸ், நேடாலிவுட், ஜிம்மி டூரான்ட் ஆகிய நடிகைகளுடனும் அவர் கலந்து கொண்டார்.

---

# சீனர்களை நாடு கடத்த யோசனை

மணிலா, ஜூன் 23 பிலிப்பைன்ஸில் மத்திய லூஸானிலுள்ள 503 சீனர்களை நாடு கடத்த வேண்டும் என்றும், இவர்கள் கம்யூனிஸ்ட் ஆதரவாளர்கள் என்றும் பொலிஸ் தலைமை அதிகாரி சிபார்சு செய்திருக்கிருர்.

---

# தென் வியட்னும் சண்டையில்

## 135 பேர் பலி

சைகோன், ஜூன் 23 சைகோனுக்கு 100 மைல் தூரத்தில் நேற்று வியட்காங் கெரில்லாக்களுடன் நடைபெற்ற கைகலப்பில் 190 வியட்காங்கியர் மாண்டனர் என்றும் அரசாங்க தரப்பில் 25 பேர் மாண்டனர் என்றும், 85 பேர் காயமடைந்தனர் என்றும் அறிவிக்கப்படுகிறது.

# 'இலங்கை-இந்தியப்பிரதமர்கள் ஆகஸ்டில் சந்திப்பர்'

—ஸ்ரீமதி மேனன்

சென்னை, ஜூன் 23 இலங்கையிலுள்ள இந்திய வம்சாவழியினர் பற்றிப் பேசும்பொருட்டு, வருகிற ஆகஸ்ட் மாதம் இந்தியப் பிரதமர் சாஸ்திரியும், இலங்கைப்பிரதமர் ஸ்ரீமதி பண்டாரநாயக்காவும் சந்திக்கக்கூடும் என கொழும்பிலிருந்து திரும்பிய ஸ்ரீமதி லக்ஷ்மி மேனன் இங்கு கூறினர். ஆனல் எங்கு, எத் திகதியில் சந்திப்பர் என்பது இன்னும் முடிவாகவில்லை என்றும் ஸ்ரீமதி மேனன் கூறினர்.

# சுவர்ண்சிங் சண்டிகார் சென்று வருவார்

## பஞ்சாப் முதல்வர் தெரிவு பற்றி காமராஜ் அறிவிப்பு

புதுடில்லி, ஜூன் 23 பஞ்சாப் சட்டசபையின் காங்கிரஸ் கட்சித்தலைவரை தெரிவு செய்வதுபற்றிப் பேச்சு நடத்த சர்தார் சுவண்சிங் சண்டிகார் செல்வார் என திரு. காமராஜ் நிருபர்களிடம் கூறினர்.

திரு. காமராஜ் இவ்விஷயமாக நேற்று பிரதமர் சாஸ்திரியைச் சந்தித்தார்.

தலைமைப்பதவிக்கான பெயர்களில் திரு. சுவர்ண்சிங்கின் பெயர் இடம்பெருது என காமராஜ் தெரிவித்தார்.

திரு. சுவர்ண்சிங் டில்லி திரும்பியபின் அவசியமானல் சண்டிகார் சென்று ஏற்பாடுகளைக் கவனிப்பார் என காமராஜர் அறிவித்தார்.

# லாவோஸ்

மாஸ்கோ, ஜூன் 23 லாவோஸில் நிலைமையைச் சமாளிப்பது பற்றி ஜெனிவா கூட்டுத் தலைமை நாடுகளான பிரிட்டனும், ரஷ்யாவும் 14 நாடுகளுடன் ஆலோசனை நடத்தி வருகின்றன. இதற்கிடையில் 6 நாடுகளின் தூதர்கள் வியண்டியனில் ஆலோசனை நடத்தி வருகின்றனர்.

---

# லக்ஸம்பர்க் தேசிய தினம்

புதுடில்லி, ஜூன் 23 லக்ஸம்பர்க்கின் தேசிய தினத்தை முன்னிட்டு ஜனதிபதி ராதாகிருஷ்ணன் வாழ்த்துச் செய்தி அனுப்பியிருக்கிருர்.

---

# "இன்னும் அவளையே நான் விரும்புகிறேன்"

## ரஷ்யாவிலிருந்து வெளியேறிய பிரிட்டிஷ்மாணவன் பேட்டி

லண்டன், ஜூன் 23 மாஸ்கோவிலிருந்து வெளியேற்றப்பட்ட 31 வயதான மாணவர் மெர்வின் மெத்யூஸ் விமான மூலம்லண்டன் வந்தார்.

மாஸ்கோ பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சிப் பட்டதாரியாக இருந்த அவர், லியூட்மிலாபிபிகோலா என்ற 30வயதான மற்ருேர் ஆராய்ச்சி அழகியை மணக்க முயன்றதைத் தொடர்ந்து அவர் வெளியேற்றப்பட்டார்.

அனுமதிக்க முடியாத நடவடிக்கைகளும், பகைப் பிரசாரமும் செய்ததாக ரஷ்யர்கள் அவர் மீது குற்றஞ்சாட்டியிருக்கின்றனர்.

"நாங்கள் பூர்வாங்கமாக நிச்சயதார்த்தம் செய்துகொண்டோம். நாங்கள் விவாகம் செய்துகொள்ள இன்னும் வலபுறுத்துவோம். இதுபற்றி பற்குடன் நான் பேசியாக வேண்டும்" என மத்யூஸ் நிருபர்களிடம் கூறினர்.

"மாஸ்கோவுக்குவந்தவுடனே லியூட்லோவை ஒரு தியேட்டரில் சந்தித்தேன். எங்கள் கல்யாணம் ஜூன் 9ம் திகதிக்கு நிச்சயிக்கப்பட்டிருந்தது. மோதிரமும் வாங்கிவிட்டோம். ஆனல் விவாகம் நடைபெற முடியாது என எங்களுக்கு அறிவிக்கப்பட்டது" என்றும் அவர் நிருபர்களிடம் கூறினர்.

ரஷ்யப் பகைப் பிரசாரத்திலீடுபட்டதாக கூறப்பட்ட குற்றச் சாட்டை அவர் மறுத்தார்.

# ஸபா மீது பிலிப்பைன்ஸ் கோரும் உரிமை

## உலக நீதிமன்றத்தில் தாக்கல்

கோலாலம்பூர், ஜூன் 23 இந்தோனேஷியா சமாதானத்திற்கு மதிப்புக் கொடுக்கவில்லை என்பதை மலேஷியா மீது அது மீண்டும் கொரில்லா தாக்குதல் நடத்தியதின்மூலம் உலகுக்கு நிரூபித்துவிட்டது என மலேஷியப் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் கூறினர். ஆனல் மலேஷியா தன்னைப் பாதுகாக்க முழு ஆயத்தத்துடன் இருக்கவேண்டும் என்றும் அவர் கூறினர்,

மலேஷிய - இந்தோனேஷிய தகராறைத் தீர்க்க 4 ஆசிய ஆபிரிக்க நாடுகள் கொண்ட கமிட்டியை நிறுவலாம் என பிலிப்பைன்ஸ் தெரிவித்திருக்கும் யோசனை பயனளிக்கும் எனத் தாம் நம்புவதாய் அதிபர் மகபகால் கூறினர்.

ஸபாவில் பிலிப்பைன்சுக்குள்ள உரிமை குறித்து உலக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது என்றும் அவர் கூறினர்.

# மலையேற்றம்

புதுடில்லி, ஜூன் 23 இந்தியாவிலேயே இரண்டாவது உயரம் கொண்ட நந்தா தேவி சிகரத்தின் மீது கடந்த சனிக்கிழமை நண்பகல் பாரத மலையேறும் கோஷ்டி ஒன்று ஏறி வெற்றி கண்டது. இதன் உயரம் 25,655 அடி.

---

# கிரிக்கெட் டெஸ்ட்

லீட்ஸ், ஜூன் 23 இங்கிலாந்துக்கும் ஆஸ்திரேலியாவுக்குமிடையே நடைபெற்று வரும் 2வது கிரிக்கெட் டெஸ்டில், ஆஸ்திரேலியா தன் இரண்டாம் இன்னிங்ஸில் 1 விக்கெட் நஷ்டத்திற்கு 49 ரன்கள் எடுத்தது.

முதல் இன்னிங்ஸில் இங்கிலாந்து 246 ரன்களும், ஆஸ்திரேலியா 176 ரன்களும் எடுத்திருந்தன.

# நோட்டு மாற்ற கமிஷன்!

யாழ்ப்பாணம், செவ்வாய் நூறுருபாய், ஐம்பதுருபாய் நோட்டுக்களை மாற்றுவதில் யாழ்ப்பாணத்தில் இப்பொழுது இலாபம் சம்பாதிப்பதாக அறியப்படுகிறது. இந் நோட்டுக்களை மாற்றுவதற்குச் சிலர் பெருமளவில் கமிஷன் வாங்குகிறார்களாம்.

நோட்டுக்கள் வைத்திருப்பவர்கள் வங்கியில் கணக்கு வைத்திருப்பவர்களிடம் சென்று கமிஷன் கொடுப்பதாகவும் சில்லறையாக மாற்றித் தரும்படியும் நிர்ப்பந்திக்கிருர்களாம்.

யாழ்ப்பாணத்திலுள்ள அரசாங்க காரியாலயமொன்றில் நேற்று ஊழியர்களுக்கு 100 ரூபாய் 50 ரூபாய்த் தாள்களாக சம்பளம் கொடுக்கப்பட்ட பொழுது ஊழியர்கள் பலர் வாங்க மறுத்ததாகத் தெரிகிறது.

# இந்தியாவின் உணவுநிலைபற்றி மந்திரிகள் விவாதம்

## விலை உயர்வை தடுக்க பரந்த அளவில் நடவடிக்கை

புதுடில்லி, ஜூன் 23 இந்தியப் பிரதமமந்திரி திரு. சாஸ்திரி தன் சகாக்களுடன் நாட்டின் உணவுநிலைபற்றிப் பூரணமாக விவாதித்தார். என அறிவிக்கப்படுகிறது. திரு. ஸி. சுப்ரமணியம், திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி,திரு. காமராஜர், திரு. நந்தா ஆகியோர் இவ்விவாதத்தில் கலந்து கொண்டனர்.

நாளை ராஜ்ய முதன்மந்திரிகள் டில்லியில் கூடி உணவு நிலைபற்றியும் விவாதிக்கவிருக்கிருர்கள்.

மகாராஷ்டிர அரசாங்கம் முதன்மந்திரி தலைமையில் உணவுநிலைபற்றிக் கவனிக்க 5 பேர்கொண்ட கமிட்டியொன்றை அமைத்திருக்கிறது.

கல்கத்தாவில் ஓரளவு ரேஷன் திட்டம் விஸ்தரிக்கப்பட்டது காரணமாக கடந்த 4 தினங்களில் நிலைமை லவகுவாகஅபிவிருத்தியடைந்திருப்பதாய் முதன்மந்திரி திரு. சென் கூறினர். அரிசி விநியோகம் அபிவிருத்தி கண்டிருப்பதாயும் நகரின் 30 லட்சம் மக்களுக்கும் இதனல் நன்மை ஏற்பட்டுவருவதாயும் அறிவிக்கப்பட்டது.

# 870 மைல் நீள குழாய் அமைப்பு

ஷில்லாங், ஜூன் 23 வட அஸ்ஸாமிலுள்ள எண்ணை வயல்களை பீகார் எண்ணை சுத்தி நிலையத்துடன் இணைக்கும் 870 மைல் நீள குழாய் அமைப்பு பூர்த்தியடைந்திருக்கிறது. கரடுமுரடான மலைகள், சிற்ருறுகள், நதிகள்வழியாக இக் குழாய் அமைக்கப்பட்டுள்ளது.

---

# "பாரத-பாக். உறவுக்கு முயல்வேன்"

புதுடில்லி, ஜூன் 23 பாரதத்துக்கும் பாகிஸ்தானுக்குமிடையே அமைதியான நட்புறவைத் தோற்றுவிக்கத் தாம் எல்லா முயற்சிகளும் செய்யப்போவதாக பிரதம மந்திரி சாஸ்திரி தெரிவித்திருக்கிருர். பாகிஸ்தான் அயல்நாட்டுமந்திரி திரு. புட்டோ அனுப்பிய வாழ்த்துச்செய்திக்கு அனுப்பிய பதிலில் அவர் இவ்வாறு கூறியிருக்கிருர்.

---

# பருத்தி உற்பத்தி

புதுடில்லி, ஜூன் 23 கடந்த ஆண்டு இந்தியா 730 கோடி மீட்டர் பருத்தித் துணியை உற்பத்திசெய்தது என அறிவிக்கப்பட்டது.

# கென்யாவிலிருந்து வெளியேற வேண்டும்

## தென்னுபிரிக்க வெள்ளையருக்கு எச்சரிக்கை

நைரோபி, ஜூன் 23 கென்யாவிலுள்ள தென்னுபிரிக்க வெள்ளையர்கள் தென்னுபிரிக்க இனத்துவேஷத்தை எதிர்க்க வேண்டும் என்றும், அப்படிச் செய்யாதவர்கள் நாட்டைவிட்டு வெளியேற்றப்படுவார்கள் என்றும் பிரதம மந்திரி திரு. ஜோமோ கென்யாட்டா இன்று நடைபெற்ற ஒரு கூட்டத்தில் எச்சரிக்கை செய்தார்.

தென்னுபிரிக்க இனத் துவேஷத்தையும், மண்டேலா உட்பட 8 தலைவர்களுக்கு தண்டனை விதிக்கப்பட்டிருப்பதையும் கண்டிக்குமுகமாக இக் கூட்டம் நடத்தப்பட்டது.

# பிரிட்டிஷ் கயானுவுக்கு சுதந்திரம் அளிக்கவும்

## ஐ. நா. கமிட்டியில் 12 நாடுகள் தீர்மானம்

நியூயோர்க், ஜூன் 23 பிரிட்டிஷ் கயானுவுக்கு கூடிய விரைவில் சுதந்திரம் வழங்குவதற்கான திகதியை பிரிட்டன் அறிவிக்க வேண்டும் என்று கோரும் தீர்மானம் ஒன்றை இந்தியாவும், மற்றும் 11 நாடுகளும் காலனிகள் பற்றிய ஐ. நா. விசேஷ கமிட்டியில் தாக்கல் செய்திருக்கின்றன.

கயானுவுக்குச் சுதந்திரம் அளிக்காததே அங்கு ஏற்பட்டுள்ள பலாத்காரச் சம்பவங்களுக்குக் காரணம் என அவைகள் தங்கள் தீர்மானத்தில் கூறியிருக்கின்றன.

---

# இந்தியாவின்பெரிய எண்ணை கப்பல்

புதுடில்லி, ஜூன் 23 இந்தியாவுக்காக ஆர்டர் செய்யப்பட்ட எண்ணைக் கப்பலை ஜப்பான் நேற்று ஒப்படைத்தது. 754 அடிநீளமும் 108 அடி அகலமும் கொண்ட இக்கப்பல் 52000 டன் எண்ணையைச் சுமந்து செல்லும்

# இராணுவ தலைமை நிலையத்திற்கு செல்லுமாறு கூறினர்கள்

## புரட்சிசதிவழக்கில் 'ஜீப்'சாரதி சாட்சியம்

கொழும்பு, செவ்.

'நான் ஒரு சாரதியாகக் கடமையாற்றினேன். ஜனவரி 27-ம் திகதி மாலை 6–15 மணிக்கு இராணுவ தலைமை நிலையத்தில் கடமையாற்றும் கப்டன் வீரசிங்காவிடம் ஜீப்பில் செல்லுமாறு என்னிடம் தெரிவிக்கபபட்டது' என்று புரட்சி சதிவழக்கு விசாரணையின் போது இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த டபிள்யூ. குணரத்தின சாட்சியமளிக்கும் போது கூறினர்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:

"நான் இராணுவ தலைமை நிலையத்திற்கு சென்று கப்டன் வீரசிங்காவையும், கப்டன் ஜெயக்கொடியையும் சந்தித்தேன். அவர்கள் ஒரூஸ்மேட் பிளேசிலுள்ள கப்டன் அங்கியின் வீட்டிற்கு செல்ல வேண்டுமெனத் தெரிவித்தார்கள். அங்கு சென்று கப்டன் அங்கியையும் அழைத்துக்கொண்டு பம்பலப்பிட்டியாவில் மேஜர் வைட்டை சந்திக்க சென்றோம் எனது டிக்கட், இராணுத் தலைமை நிலையத்தில் மட்டுமே பாவிக்க முடியுமெனத் தெரிவித்தேன். கப்டன் வீரசிங்கா தனது டிக்கட்டில் பம்பலப்பிட்டியா என்று எழுதினர். மூன்று பேர்களும் மேஜர் வைட் வீட்டில் தங்கினர்கள். நான் மாலை 6-55 மணிக்கு அவ்விடமிலிருந்து திரும்பினேன்.

சாட்சியமளித்த குணரத்தினவை, எதிரிகளின் வழக்கறிஞர் திரு. எஸ். ஜே. கதிர்காமர் குறுக்குவிசாரணை செய்தார்.

கே. ஓ பியசேன சாட்சியமளிக்கும போது, ஜனவரி 27-ம் திகதி கப்டன் ஜெயக்கொடியும், கப்டன் வீரசிங்காவும் மதுபானம் அருந்துவதற்காக இரவு 9-45 மணிக்கு வந்தார்களா என்றும் அவர்களுக்கு ஒரு முறை தான் மதுபானம் வழங்க முடியுமென்று தான் கூறியதாகவும் தெரிவித்தார்.

திரு. எஸ். ஜே. கதிர்காமரால் குறுக்குவிசாரணை செய்யப்பட்டபோது, தான் கடையைப் பூட்டிய பின்பும் அவர்கள் தங்கியிருந்தார்களெனத் தெரிவித்தார். கப்டன் வீரசிங்கா ஒரு 'பிளாக்ஸ்' நிரம்ப சாராயம் நிரப்பும் படி கூறியதாக தனக்கு ஞாபகமில்லையென்றும் தெரிவிததார்.

# மொழிப்பிரச்னைக்கு சுமுகமான தீர்வுகாணவே விரும்புகிறேன்

## உடுப்பிட்டி எம். பி. யிடம் நிதிமந்திரி கூறினர்

நல்லூர், செவ்வாய்

நிதிமந்திரி டாக்டர் என். எம். பெரேராவை உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் சந்தித்து கட்டாயஓய்வு உத்தரவுகளை உடனடியாக ரத்துச்செய்ய நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொண்டுள்ளார். மொழிப்பிரச்னைக்கு சுமுகமான தீர்வு காணவே தாம் விரும்புவதாக நிதிமந்திரி தெரிவித்துள்ளார்.

மொழிப்பிரச்னைக்கு தீர்வு காணுவதற்கு முன்னர் உடனடியாக கட்டாய ஓய்வுஉத்தரவுகள்பற்றி நடவடிக்கை எடுக்கப்படுவது அவசியமென்பதனை உடுப்பிட்டி எம். பி. திரு. சிவசிதம்பரம் டாக்டர் பெரேராவிடம் வற்புறுத்தியுள்ளார்.

வியாழக்கிழமை நடைபெறும் மந்திரிசபைக் கூட்டத்தில் தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கட்டாயஓய்வு உத்தரவுகள்பற்றி டாக்டர் என். எம். பெரேரா பிரஸ்தாபிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆகஸ்ட் மாதத்தில் சுமார் 20 அரசாங்க ஊழியர்கள் கட்டாயஓய்வு உத்தரவு காரணமாக வெளியேற நேரிட்டுள்ளதனையும் திரு. சிவசிதம்பரம் சுட்டிக் காட்டினர். தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தவரையில் இன்று மிகவும் முக்கியமாகக் கருதப்படுவது கட்டாயஓய்வு உத்தரவுகளே என்றும் அவற்றை ரத்துச்செய்ய நடவடிக்கை எடுப்பதன்மூலம் தமிழ்மக்களுக்கு சிறிது நம்பிக்கையை ஏற்படுத்த முடியும் என்பதனையும் திரு. சிவசிதம்பரம் டாக்டர் என். எம். பெரேராவுக்கு விளக்கியுள்ளார்.

புதிய வரவுசெலவுத்திட்டம் ஜூலை மாதம் 20-ம் திகதியளவில் பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்படும் எனத் தாம் எதிர்பார்ப்பதாக திரு. சிவசிதம்பரம் நிருபரிடம் கூறினர். புதிய வரவு செலவுத்திட்டத்தில் புரட்சிகரமான மாற்றங்கள் எதுவும் இருக்காதெனவும் அவர் அபிப்பிராயம் தெரிவித்தார்.

# "புதுபட்ஜட் ஆறுதலளிக்கும்"

மத்துகம, செவ்வாய்

"புதிய பட்ஜட் முதலாளிவர்க்கத்தைத்தவிர மற்றவர்களுக்கெல்லாம் ஆறுதலளிப்பதாகவிருக்கும்" என போக்குவரத்து மந்திரி திரு. அனில் முனசிங்கா மத்துகம, அகலவத்தைத் தொகுதிக்கு விஜயம் செய்தபோது அங்குள்ள மக்களிடையே பேசுகையில் குறிப்பிட்டார்.

அத்தியாவசியப் பொருள்கள் விலைக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின்கீழ் கொண்டுவரப்படுமென்றும் கள்ளச்சந்தைக்காரர்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் தெரிவித்தார்.

# காணிபெறுவோர்

நல்லூர், செவ்வாய்

யாழ்ப்பாணத்தில் உள்ள படித்த வாலிபர்களுக்கும், விவசாயிகளுக்குமான காணி விநியோகத் திட்டத்திற்கு விண்ணப்பித்தவர்களிலிருந்து 1275 பேர்கள் தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றனர்கள். இவர்கள் அடுத்தமாதத்தில் தமக்குரிய காணிகளைப் பொறுப்பேற்றுக்கொள்ளவேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலுள்ள விவாகமான விவசாயிகளுக்கு 1200 துண்டுக் காணிகளும் படித்த வாலிபர்களுக்கு 75 துண்டுக் காணிகளும் வழங்கப்படும். ஒருவருக்கு 7 ஏக்கர் காணிவீதம் வழங்கப்படும்.

காணி விநியோகத் திட்டத்தில் தெரிவுசெய்யப்பட்டிருப்பவர்களின் பெயர்கள் பிரிவுக் காரியாதிகாரிகளினுல் ஒவ்வொரு கிராமசேவையாளர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

# விபத்தும் தற்கொலையும் பெருகுகின்றன

கொழும்பு, திங்கள்

ஜூன் தொடக்கத்திலிருந்து இன்றுவரை 40 தற்கொலைகளும், 19 அபாயகரமான விபத்துக்களும் ஏற்பட்டுள்ளன என பொலிஸ் தலைமைக் காரியாலயம் அறிவித்திருக்கிறது. இதுவரையில் இந்த ஆண்டின் தற்கொலை எண்ணிக்கை 289ம் அபாயகரமான விபத்து 201ம் ஆகும்.

# கட்டாய ஓய்வு வழக்கு

## விரைவில் தாக்கலாகும்

நல்லூர், செவ்வாய்

சிங்களத்தில் தேர்ச்சியடையாத காரணத்தால் தமிழ் பேசும் அரசாங்க ஊழியருக்கு வழங்கப்பட்டுவரும் கட்டாய ஓய்வு உத்தரவுகளை எதிர்த்து அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் வழக்கு தாக்கல்செய்ய தயாராகியுள்ளது.

மிக விரைவில் இதுசம்பந்தமான வழக்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல்செய்யப்படும். தமிழ் ஊழியர்களுக்கு எதிராக வழங்கப்படும் கட்டாய ஓய்வுஉத்தரவுகளை நிறுத்திவைக்கும்படி திறைசேரிக்கு உத்தரவிட வேண்டுமென்று நீதிமன்றத்தைக் கேட்டுக்கொள்வதுபற்றி வழக்குத் தாக்கல்செய்யப்படுவதோடு, வழங்கப்பட்டுள்ள கட்டாய ஓய்வு உத்தரவுகளை ஆட்சேபித்தும் வழக்குத் தாக்கல்செய்யப்பட விருப்பதாகத் தெரிகிறது.

அரசாங்க எழுதுவினைஞர் சங்கப் பிரதிநிதிகள் இந்த வழக்குச் சம்பந்தமாக பிரபல வழக்கறிஞர்களின் உதவியை நாடியுள்ளனர்.

# ஆதரவளிக்க தீர்மானம்

யாழ்ப்பாணம், செவ்.

சுன்னாகம் சமசமாஜ வாலிபர் சங்கம், கூட்டு அரசாங்கத்திற்கு ஆதரவு அளிப்பதென்றும் டாக்டர் என். எம். பெரேராவும், திரு. சம்ளி குணவர்த்தனவும், திரு. அனில் முனசிங்காவும் வகுக்கும் திட்டங்களை அமுல் நடத்த எந்த வகையில் ஆதரவு கொடுக்க வேண்டுமோ அந்த வகையில் ஆதரவு கொடுத்து அகில இலங்கைச் சமசமாஜக்கட்சியின் வளர்ச்சிக்கான வழியில் உழைப்பதெனவும் ஓர் தீர்மானம் நிறைவேற்றியது.

சுன்னாகம் சமசமாஜ வாலிபர் சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்தில் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

புதுவருட உத்தியோகத்தர் தெரிவு வருமாறு:

தலைவர்: திரு. வி. கே. வைத்திலிங்கம், உபதலைவர்: திரு. முருகன், காரியதரிசி: திரு. ரி. தர்மதுரை, பொருளாளர்: திரு. வி. விவேகானந்தன்.

# மன்னா் பட்டினசபை நிதிமந்திரிக்கு அழைப்பு

மன்னார், செவ்வாய்

மன்னார் பட்டினசபையால் கட்டப்படவிருக்கும் விளையாட்டு அரங்கத்துக்கும் மன்னார் பொதுசன நூல்நிலையத்தை விஸ்தரிப்பு செய்யும் வகையில் நூல்நிலையத்தோடு சேர்த்துக் கட்டப்படவிருக்கும் கட்டடத்துக்கும் அடிக்கல் நாட்டி வைப்பதற்கு நிதிமந்திரி டாக்டர் என். எம். பெரேரா அழைக்கப்படவிருக்கிறார்.

இதற்கான தீர்மானமொன்று மன்னார் பட்டின சபையால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

கூட்டரசாங்கம் அமைத்ததை வரவேற்குமுகமாக பிரதமருக்கு செய்தி அனுப்புவதென்றும் சிறுபான்மையினரின் பிரச்னைகள் நியாயமான முறையில் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென சபை நம்பிக்கைகொண்டிருப்பதாகவும் தெரிவிக்கும் தீர்மானமும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

# சீனவுக்கு எச்சரிக்கை

மாஸ்கோ, ஜூன் 22

சீன ரஷ்ய எதிர்ப்புக் கொள்கையைப் பின்பற்றினுல் நெருக்கடியான நிலைமை வரும் போது, அது ரஷ்யாவிடமிருந்து உதவியை எதிர்பார்க்க முடியாது என பிராவ்டாவில் கூறப்பட்டுள்ளது.

# ஆசிரியருக்கு சம்பளம்

பாணந்துறை, செவ்

டாக்டர் என். எம். பெரேரா நிதிமந்திரியாகியுள்ளதால் அவரது கட்சி உறுதியளித்திருந்தபடி ஆசிரியர்கள் சகலரும் சம சம்பளம் பெறுவார்களென்ற நம்பிக்கை கொள்ளலாம் என ஸ்ரீலங்கா ஜாதிககுரு சங்கத்தின் தலைவர் திரு. டி. பீட்டர் சில்வா, சங்கத்தின் பாணந்துறைக் கிளைக்கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

திரு. சில்வா மேலும் பேசுகையில் தமது 5 கோரிக்கைகள் குறித்து பரிசீலனை செய்வதாக பிரதமர் வாக்குறுதியளித்துள்ளதாகதெரிவித்தார்.

# கபூரின் யாழ்ப்பாண விஜயம்

நல்லூர், செவ்வாய்

இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவர் திரு. பி. கே. கபூர் தமது பாரியாருடன் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்கிறார். யாழ்ப்பாணத்திலுள்ள பல கல்லூரிகளுக்கும் ஆலயங்களுக்கும் தொழில்நிலையங்களுக்கும் கபூர் தம்பதிகள் செல்ல ஏற்பாடாகியுள்ளது.

வெள்ளிக்கிழமை காலை யாழ்ப்பாணம் வரும் கபூர் தம்பதிகள் அன்று பிற்பகல் வடமராட்சிக்குச் செல்வர். மாலையில் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் இலங்கை-இந்தியர் நட்புறவுச் சங்கத்தை திரு. கபூர் அங்குரார்ப்பணம்செய்து வைப்பார் இரவு 8 மணிக்கு நல்லூர் ஸ்ரீகந்தசுவாமிகோவிலுக்குச் சென்று சுவாமிதரிசனம் செய்வர்.

சனிக்கிழமை காலையில் நயினாதீவுக்கும் மாலையில் இராமநாதன் கல்லூரிக்கும் விஜயம் செய்வர்: மாலையில் மத்திய கல்லூரி மண்டபத்தில் கபூர் தம்பதிகளுக்கு விருந்துபசாரமளிக்கப்படும். ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியர் சங்கக் காரியாலயத்தில் இந்தியரைச் சந்திப்பார். யாழ்ப்பாணத்திலுள்ள லேடன் தொழிற்சாலைக்கும் அவர்கள் விஜயம் செய்வர். இந்திய தகவல் பகுதியினரின் செய்திப் படக்காட்சி பல இடங்களிலும் காண்பிக்கப்படும்.

# தனிப்பயிற்சிக்கு கலாசாலை

கொழும்பு, செவ்

ஆங்கில ஆசிரியர்களுக்கென தனிப்பட்ட பயிற்சிக்கலாசாலை ஒன்றை நிறுவ கல்வி மந்திரி திரு. பி. பி. ஜி. கலுகல்லை முடிவு செய்துள்ளார். அகில இலங்கை ஆங்கில உதவியாசிரியர் சங்கத் தூதுகோஷ்டியொன்று கல்வி மந்திரியைச் சந்தித்தபோதே மேற்படி தகவல் மந்திரியால் தூதுகோஷ்டியிடம் தெரிவிக்கப்பட்டது.

தூதுகோஷ்டியின் கோரிக்கைக்கிணங்க வருங்காலத்தில் கல்வி பயிற்றும் ஆசிரியர்களை மட்டுமே பயிற்சிக்கு எடுத்துக்கொள்வது என்றும் கல்வி மந்திரி தீர்மானித்துள்ளார்.

# தமது நோக்கம்பற்றி எம். பி. விளக்கம்

மன்னார், செவ்வாய்

'இத்தொகுதியின் எம். பி. என்ற முறையில் இங்குள்ள கிராமப்புறப் பாடசாலைகளில் விஞ்ஞானம் கற்பிக்க வசதியளிப்பது எனது நோக்கமாக இருந்து வந்துள்ளது.

இந்த நோக்கத்தாலேயே இப்பாடசாலையில் விஞ்ஞான ஆய்வுகூடம் கட்டுவதற்கு நான் நிதி பெறக்கூடியதாகவிருந்தது'.

இவ்வாறு மன்னார் எம். பி. திரு. வி. ஏ. அழகக்கோன் விடத்தல்தீவு முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள விஞ்ஞான ஆய்வுகூடத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் தெரிவித்தார்.




## வரி விளம்பரம்

### தேவை

நல்ல முறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பற்றறி சேர்விஸுக்கு ஒரு கிளார்க் உடனே தேவை. 1000 ரூபா பிணைப்பணம் கட்டக்கூடியவராக இருத்தல் வேண்டும். நேரில் விண்ணப்பிக்கவும். மகேந்திரன் பற்றறி சேர்விஸ், 358, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 534

### WANTED

Manager for a Rice Mill in Vavuniya District. Unqualified typing knowledge preferred. Security Rs. 5000-00 earning 6% interest Starting Salary Rs. 200-00 Apply before 30-6-64 Theivasthan Corporation. C/o Eelanadu, Jaffna 520

### உள்நாட்டுத் தயாரிப்புகள்

"மூலப்பொருட்களுக்கு தட்டுப்பாடு" என்று கூப்பாடு போடுங் காலத்திலே சிறந்த உள்நாட்டுத் தயாரிப்புகளை உங்களுக்கு குறைந்தவிலையில் கொடுத்து உதவத் தயாராக இருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம். அ. த. பாலசுப்பிரமணியம், அளவெட்டி. 290

### கபிரியேல் தயாரிப்புகள்

1. கபிரியேல் பெயின் ஓயில்

சகல கோவு, வீக்கம், வாதம் எதையும் குணமாக்கும். இன்னும் மாடுகளுக்கேற்படும் மேற்படி ரோகங்களும் குணமாகும்.

2. கபிரியேல் ஓயின் மென்ற்

சகல அவியல், புண், கட்டு எதையும் ஆற்றும் ஒரே புண் களிம்பு.

3. கபிரியேல் ஸ்பெஷல் பாம்

தடிமன், தலையிடி, சந்துவலி போன்ற எல்லா வேதனைகளையும் தணிக்கவல்ல விசேஷ பாம்.

தயாரிப்பாளர்கள்:

GABRIELS, Chunnakam. 273

### விற்பனைக்கு

பலசரக்குக்கடைக்கு வேண்டிய அலுமாரியும் விருக்கி, பெரிய தராசு, அதற்குரிய அரை அந்தர் படிக் கல்லுகளும் அதற்குரிய சிறு படிக் கல்லுகளும் 24 இஞ்ச G. C. C. காற்றாடி ஒன்றுமிருக்கிறது. தேவையானோர் நேரில்பார்வையிடலாம். 116, ஆஸ்பத்திரி வீதி, பெரியகடை, யாழ்ப்பாணம். 536

### House To Let

Spacious house with drainage, flush lavatory, shower bath To-Let at 9, Somasundaram Avenue, Jaffna-Contact Peter. 538


## வானொலி நிகழ்ச்சிகள்

### புதன் 24-6-64

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 காலைக்கதிர், 6-50 இஸ்லாமியசிந்தனை, 7-15 குரல்வகை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதம்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நிலைய ஒலிப்பதிவுகள், 5-45 திரை இசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 நேயர்விருப்பம், 7-15 பேச்சு — 'தேம்பாவணி' 7-30 பாட்டு — செல்வி நாகபூஷணி ரத்தினம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 உங்கள் பிரச்னைகள், 9-45 சாஸ்திரிய சங்கீதம், 10-15 தேர்ந்த இசை.


## கேள்வி பற்றிய விளம்பரம்

### கீரிமலை புனருத்தாரண வேலை

1964-ம் ஆண்டு ஆடி மாதம் 4-ந் திகதி சனிக்கிழமை காலை 10 மணி வரை கீரிமலைக் கடலில் கற்பாறைகள் அகற்றுவதற்கு கேள்விகள் அழைக்கப்படுகின்றன. கேள்வி விண்ணப்பப்பத்திரங்கள் ரூபா 25-00 கட்டி ஆடி மாதம் 3-ந் திகதி பகல் 12 மணி வரை உள்ளூராட்சி உதவி அதிபர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

ஏனைய விபரங்கள் மேற்படி அலுவலகத்திலும் தெல்லிப்பளைக் கிராமசபை அலுவலகத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

சி. சி. மாணிக்கவாசகர்,
உள்ளூராட்சி உதவி அதிபர்.
உள்ளூராட்சி அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
22-6-64 611

## தேவை

காரைநகர் கிராமசபை அலுவலகத்திற்கு காவலாளி தேவை.

வயது: 35 வயதிற்கும் 45 வயதிற்கும் இடைப்பட்டோராய் இருக்கவேண்டும்.

ஆங்கிலம் அல்லது தமிழ் எழுத வாசிக்கத் தெரிந்தவராய் இருத்தல் வேண்டும்.

வாழ்க்கைப்படியின்றி ரூபா 50 மாத்திரம் மாதச்சம்பளமாக வழங்கப்படும்.

அண்மையில் பெற்ற இரு நற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். விண்ணப்ப முடிவுத் திகதி 4-7-64.

ஒப்பம்
சி. சி. மாணிக்கவாசகர்
நிர்வாகஸ்தர்.
610

## கேள்விப்பத்திரம்

தென்மராட்சி மேற்கு ப. நோ. கூ. ச. சமாச வேலைகளைச் செய்துதர லொறிக்கு கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகிறது. விண்ணப்பங்கள் சமாசக் கந்தோரில் ரூபா 10-00 (பத்து) கட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் யாவும் 10-7-64க்குமுன் சமாசக்காரியதரிசியிடம் சேரக்கூடியதாக அனுப்பப்படவேண்டும்.

க. சி. சுந்தரம்,
கௌரவ காரியதரிசி,
609 கைதடி.


## சிமெந்து இறக்குமதி செய்தாலென்ன?

### காலி எம். பி. கேள்வி

கொழும்பு, திங்கள்

'வீடு கட்டிக்கொள்வதற்கு பெர்மிட்டுக்குக்கூட சிமெந்து பெறமுடியாது சாதாரண மக்கள் கஷ்டமுறும் சமயத்தில் கள்ளச்சந்தையில் சிமெந்து நன்கு விற்பனை செய்யப்படுகிறது' என காலி எம். பி. திரு. டபிள்யு. தகநாயக்கா உணவு, விவசாய, கூட்டுறவு மந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகாவுக்கு முறையிட்டுள்ளார்.

இவ்வித பற்றாக்குறையை நீக்க ஏன் வெளிநாடுகளிலிருந்து சிமெந்து இறக்குமதி செய்யக்கூடாது என் திரு. தகநாயகா கேட்டுள்ளார்.


## மரண அறிவித்தல்

யாழ்-வைத்தியசாலை சேவையாளரும், யாழ்ப்பாணக்கூட்டுறவு சேவை கடன் நிவர்த்திச் சங்கத்தின் அங்கத்தவருமான செ. ஜெயசீலனின் தகப்பன் பேதுறுப்பிள்ளை செபமாலை காலமானார். அன்னாரின் சடலம் ஊர்காவற்றுறை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. 539


# மயிலிட்டி கிராமசபை தேர்தல் முடிவுகள்

யாழ்ப்பாணம், புதன்

நேற்று முன்தினம் நடைபெற்ற மைலிட்டி கிராமசபைத் தேர்தலில் 1-ம் வட்டாரத்தில் போட்டியிட்ட கதிரிப்பிள்ளை சின்னையா, 2-ம் வட்டாரத்தில் போட்டியிட்ட வி. சம்பந்தன், 11-ம் வட்டாரத்தில் போட்டியிட்ட கதிரிப்பிள்ளை சின்னையா ஆகியோருக்கு தலா 1 வாக்குமட்டுமே கிடைத்தது. 4-ம் வட்டாரத்தில் போட்டியிட்ட குட்டியன் சூரிய காந்திக்கு 2 வாக்குகள் கிடைத்தன.

**1-ம் வட்டாரம்**

முத்தையா கணபதிப்பிள்ளை 183, இராசநாயகம் வல்லிபுரம் 147, கதிரிப்பிள்ளை சின்னையா 1, பழுதடைந்தவை 1.

**2-ம் வட்டாரம்**

எஸ். ஜி. துரைராஜா 105, வி. துரைராஜா 101, எஸ். செல்லத்துரை 80, கே. கேதரசிங்கம் 4, வி. சம்பந்தன் 1, பழுதடைந்தவை 3.

**3-ம் வட்டாரம்**

பாக்கியம் இராசப்பு 91, சூசைப்பிள்ளை பெனடிக்ற் 61, வல்லியாம்பிள்ளை சிங்கராசா 12. பழுதடந்தவை 2.

**4-ம் வட்டாரம்**

நாகமுத்தன் அப்புக்குட்டி 91, முருகேசு சின்னத்துரை 6, குட்டியன் சூரியகாந்தி 2, பழுதடந்தவை 0.

**5-ம் வட்டாரம்**

வைரமுத்து செல்லத்துரை 276, முருகேசு சுவாமிநாதன் 246, பழுதடந்தவை 11.

**6-ம் வட்டாரம்**

மாப்பாணர் இளையதம்பி 291, அரியகுட்டி செல்வரத்தினம் 137, ஆறுமுகம் முத்துக்குமாரு 9, பழுதடந்தவை 6.

**8-ம் வட்டாரம்**

எஸ். சுப்பிரமணியம் 122, வி. முருகன் 75, பழுதடைந்தவை 6.

**9-ம் வட்டாரம்**

சின்னட்டி செல்லத்துரை 196, மசலாணி பொன்னன் 128, பழுதடைந்தவை 14.

**10-ம் வட்டாரம்**

மாணிக்கன் வேலன் 106, நடராசா முத்துக்குமாரு 93, தவசி சின்னன் 49. பழுதடைந்தவை 2.

**11-ம் வட்டாரம்**

வேலுப்பிள்ளை நாகலிங்கம் 287, சின்னக்குட்டி சின்னையா 251, நடராசா செல்லன் 130, செல்வராஜா சுவாமிநாதர் 103, செல்லையா சிதம்பரப்பிள்ளை 38, கதிரிப்பிள்ளை சின்னையா 1, பழுதடைந்தவை 10.

**12-ம் வட்டாரம்**

குருஸ் எலியஸ் தேவதிரவியம் 347, காசிப்பிள்ளைவல்லிபுரம் 199, அப்புக்குட்டி தம்பையா 146, சூசைப்பிள்ளை அருள்நேசன் 22 பழுதானவை 7.

**13-ம் வட்டாரம்**

உலகநாதன் செல்லத்துரை 211, சின்னத்தம்பி தாமன் 161, பழுதானவை 3.

**14-ம் வட்டாரம்**

சின்னையா ஆறுமுகம் 226, பாலசுந்தரம் நாகலிங்கம் 178, பழுதானவை 3.

**15-ம் வட்டாரம்**

இராசப்பு கிளன்டீன் லோறன்ஸ்பிள்ளை 200, இன்னாசித்தம்பி அருணப்பு 6, பழுதடைந்தவை 4.

**16-ம் வட்டாரம்**

கே. குலத்துங்கர் 172, எஸ். கணபதிப்பிள்ளை 162, பழுதடைந்தவை 4.

**17-ம் வட்டாரம்**

எஸ். சிவலிங்கம் 234, கே. செல்லத்துரை 136, பழுதடைந்தவை 9.


### விற்பனைக்கு

சோடா மெசின் தளவாடங்களுடன் விற்பனைக்கு உண்டு. நேரில் வரவும்.

க. ஜெயராசசிங்கம், 517,
K. K. S. வீதி, யாழ்ப்பாணம்.
542


## கலைப்போட்டி முடிவுகள்

பருத்தித்துறை, செவ்.

இலங்கைத் தமிரசுக் கட்சியின் உடுப்பிட்டிக் கிளையால் ஏற்பாடு செய்யப்பட்ட கலைப் போட்டிகள் நேற்றைய தினம் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

நியாயவாதிகள் திருவாளர்கள் இ. நவரத்தினம், ச. பொன்னையா, க. ஜெயக்கொடி ஆகியோர் முறையே பேச்சு, சங்கீதம், நடன நாடகப்போட்டிகளுக்கு தலைமை வகித்தனர்.

போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் பரிசில்கள் வழங்கினர்.

போட்டிகளின் முடிவுகள் வருமாறு.

பேச்சு-கீழ்ப்பிரிவு ஆண்கள்: தா. சத்தியகிரி, ம. சுந்தரன், த. வசந்தகுமார்.

கீழ்ப்பிரிவுபெண்கள்: செல்வி க. குமுதவல்லி, செல்வி ந. இளவேணி.

மேற்பிரிவு ஆண்கள்: ச. சிவராசசிங்கம், ஆ. வேலாயுதம், க. நீலகண்டன்.

மேற்பிரிவு பெண்கள்: செல்வி த. சுகிர்தலோசனி, செல்வி சி. சிவயோகம்.

சச்சீதப் போட்டி

கீழ்ப்பிரிவு: க. கமலினி, செ. நிர்மலாதேவி, க. சாந்தலட்சுமி.

மேற்பிரிவு: த. செல்வலிங்கம், ம. யோகராசா, இ. மங்கையர்க்கரசி.

கட்டுரைப்போட்டி

கீழ்ப்பிரிவு: எஸ். யே. ஜெயக்குமார், ஆ. இராசமாணிக்கம், க. கமலாம்பிகை.

மேற்பிரிவு: க. நீலகண்டன், எஸ். விநாயகமூர்த்தி, ம. இந்திராணி.

## "திருவாசகம் தரும் இனிமை"

உடுப்பிட்டி, செவ்.

"தேன் குடித்த மகிழ்ச்சியை திருவாசகம் மூலம் உணரமுடியும். இலங்கை மக்களைப் பற்றி இராமன் அனுமானிடம் கேட்டபோது "அளிக்குந் தேறலுண்டு ஆடுநர் பாடுநராகி...." என்று கூறினான் அனுமன். அத்தகைய தேறலைத்தான் திருவாசகம் உணர்த்துகிறது. தூயமலரிலே தேன் உதயமாவது போலவே இறைவனது தூய உள்ளத்திலிருந்துதான் திருவாசகம் உருவாகியது. தேன் இரத்தத்தைச் சுத்தமாக்குவதுபோலவே திருவாசகமும் பக்தர் உள்ளத்தைச் சுத்தமாக்குகிறது."

கரவை தச்சன்தோப்பு விநாயகர் ஆலயத்தில் 'திருவாசகம்' பற்றிச் சொற்பொழிவாற்றிய செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி மேற்கண்டவாறு கூறினார்.

திரு. எஸ். கந்தப்பு நன்றியுரை கூறினார்.

## நஷ்டஈடு விகிதம் உயர்த்தப்படும்

கொழும்பு, செவ்

தொழிலாளர் நஷ்ட ஈட்டுச் சட்டத்திற்கு அமைய வழங்கப்பட்டுவரும் நஷ்டஈடுகளின்விகிதம் அதிகரிக்கப்பட விருக்கிறது. இன்றைய வாழ்க்கைச் செலவு உயர்ந்துள்ளதால் இதுவும் உயர்த்தப்பட வேண்டும் என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. தொழில் வீடமைப்பு மந்திரி திரு. எம். பி. டி. இசற். சில்வர்த்தன இதற்கான பாராளுமன்றத்தின் அங்கீகாரம் பெறுவதற்கானமுயற்சிகளை மேற்கொண்டுள்ளார்.

## ஆசிரியர்சங்க நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், திங்கள்

அகில இலங்கை அரசினர் பாடசாலைத் தமிழ் தராதரப் பத்திர ஆசிரியர் சங்கத்தின் ஐந்தாவது வருடாந்தப் பொதுக்கூட்டம் நேற்றுப் பிற்பகல் யாழ்ப்பாணம் சிங்கள மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இலங்கையின் பல பகுதிகளிலிருந்தும் ஆசிரியர்கள் கலந்துகொண்ட இக் கூட்டத்திற்கு திரு. வ. சின்னத்தம்பி தலைமைவகித்தார்.

பின்வருவோர்புதுவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: திரு. வ. சின்னத்தம்பி, உபதலைவர்கள் திரு. வி. எஸ். சுந்தரசிங்கம், திரு. க. ச. கந்தவனம், திரு. கா. முருகேசு, காரியதரிசி: திரு. சி. க. இராசசிங்கம், உப காரியதரிசி: திரு. பொ. சிவஞானம், தனதிகாரி: திரு. க. இராசதுரை, நிர்வாகசபை அங்கத்தவர்கள்: திரு. நா. தம்பு, திரு. சி. அருளம்பலம், திருமதி ச பீ ஞ யோசேப், திரு. கு. கணபதிப்பிள்ளை.

## 'ஐ. இ. முன்னணி சிதைக்கப்பட்டுவிட்டது' —பிலிப்

கொழும்பு, செவ்.

ஐக்கிய இடதுசாரி முன்னணி சிதைக்கப்பட்டுவிட்டதென்பதுதான் மக்கள் ஐக்கிய முன்னணியின் கருத்தென்று, மக்கள் ஐக்கிய முன்னணியின் சார்பில் அக்கட்சியின் தலைவர் திரு. பிலிப் குணவர்த்தன நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

1956-ம் ஆண்டு மக்கள் அரசாங்கம் அடைந்த மாபெரும் வெற்றியை நிலைநிறுத்துவதற்கு மக்கள் ஐக்கிய முன்னணி எல்லாவித நடவடிக்கைகளையும் எடுத்துவந்ததென்றும், மக்களுக்கு சில வாக்குறுதிகளையளித்து சென்ற வருடம் ஆகஸ்ட் மாதம் 12-ம் திகதி ஐக்கிய இடதுசாரி முன்னணி நிறுவப்பட்டதென்றும் தற்பொழுது அது சிதைக்கப்பட்டுவிட்டதென்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 'அரசாங்க பொதுச்சந்தை வேண்டும்'

உடுப்பிட்டி, செவ்.

கரவெட்டி மேற்கு உவுண உற்பத்திச்சபையின் ஆலோசனைக் கூட்டம் கரவை மேற்கு கிராமசேவையாளர் திரு. க. இரத்தினசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

நிலக்கடலை, உருளைக் கிழங்கு, பீற்றூட், கரட் முதலிய புதிய பயிர்களை வடமராட்சிப் பகுதி விவசாயிகள் செய்கை பண்ணவேண்டுமென்றும் இப் பொருட்களை நியாயமான விலைக்கு எடுக்கும் அரசாங்க பொதுச் சந்தை ஒன்றையும் இப்பகுதியின் மத்தியான இடத்தில் நிறுவவேண்டும்" என்றும் தலைவர் குறிப்பிட்டார்.

சபையின் தீர்க்கமான ஆலோசனையின் பின்னர் அரை ஏக்கர் நிலத்தில் உருளைக் கிழங்கு, அரை ஏக்கர் நிலத்தில் பம்பாய் வெங்காயம், ஒன்றரை ஏக்கர் நிலத்தில் நிலக்கடலை, 5 ஏக்கர் நிலத்தில் வெங்காயம், 10 ஏக்கர் நிலத்தில் மிளகாய் பயிர் செய்வதென முடிவுசெய்யப்பட்டது.

உணவு உற்பத்தி மேற்பார்வையாளர் திரு. மு. கணபதிப்பிள்ளையும் பேசினார்.

# சைப்ரஸில் ஐ. நா. நடவடிக்கை தீவிரம்

நிக்கோஸியா, ஜூன் 23

சைப்ரஸிலுள்ள ஐ. நா மத்தியஸ்தர் பிரதமர் மக்காரியோஸையும், இதர தலைவர்களையும் சந்தித்துப் பேசினர்.

இதற்கிடையில் முன்னாள் சைபரஸ் சுதந்திரப் போராட்ட வீரர் திரு. கிரிவாஸ் சைபரஸ் வந்திருப்பதாயும், திரு. மக்காரியோஸ் உட்பட பலருடன் அவர் பேச்சு நடத்தியதாயும் கூறப்படுகிறது.

ஐ நா. தீர்மானத்திற்கிணங்க தமது படைகளை மேலும் 3 மாதத்திற்கு சைபரஸில் அமைக்க இணங்குவதாக கனடா தெரிவித்திருக்கிறது. சைப்ரஸ் ஐ நா. நடவடிக்கைக்கு யுதாண்ட் கோரியுள்ள 56,34, 290 டலர்களில் 20 லட்சம் டலரை அமெரிக்காவும் 10 லட்சம் டாலரை பிரிட்டனும் கொடுத்துதவும்.

## சமசமாஜிகளுக்கு முன் வரிசை

கொழும்பு, செவ்வாய்

சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த 4 எம். பி.க்களுக்கு பாராளுமன்றத்தில் முன்வரிசையில் இடம் கிடைக்கு.

நிதிமந்திரி டாக்டர் என்.எம். பெரேரா, போக்கு வரத்து மந்திரி திரு. அனில் முனசிங்கா, பொதுவேலை மராமத்துமந்திரி திரு. சம்ளி குணவர்த்தன, ஸ்தலஸ்தாபன மந்திரியின் பாராளு மன்ற காரியதரிசி திருமதி விவியன் குணவர்த்தன ஆகிய நான்கு சமசமாஜக் கட்சி எம். பி. க்களும் அரசாங்க கட்சியினருக்கான வரிசையில் முன் ஆசனத்தில் இருப்பார்கள்.


வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில்

இந்தியா-இலங்கை நட்புறவுச் சங்கத்தை

இந்திய ஹைகமிஷனர்

மேன்மைதங்கிய B.K. கப்பூர் அவர்கள்

யூன் மீ 26-ந் திகதி மாலை 6 மணிக்கு

அங்குரார்ப்பணம் செய்துவைப்பார்கள்.

இதைத்தொடர்ந்து கதம்பக்கச்சேரியும்

படக்காட்சியும் நடைபெறும்.

எல்லோரும் அழைக்கப்படுகின்றனர்.

இணைக்காரியதரிசிகள்.

சிவன் கோவில் மேலை வீதி

யாழ்ப்பாணம்.



மகத்தான 5-வது வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) | ரீகல் (வெள்ளவத்தை) | வெலிங்டன் (யாழ்ப்பாணம்) | விஜிதா (ஹட்டன்)

ஸ்ரீகிருஷ்ணா (திருமலை) | வொர்லினி (கண்டி) | சீதா (பலாங்கொட) | மொடேர்ன் (பதுளை)

எஸ். எஸ். ராஜேந்திரன் - விஜயகுமாரி

நடிக்கும்





நானும் ஒரு பெண்

ஜூன் மீ 26-ந் திகதி முதல்

கெப்பிட்டல் - ரீகல்

மற்றும் சினிமாஸ் திரைகளில்

கொஞ்சும் குமரி


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 6ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு ஜூன் மாதம் 24-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# லொறி தூணில் மோதியது; தூண் விழுந்து சிறுவன் மரணம்

யாழ்ப்பாணம், செவ்.

17 அடி 4 அங்குல வீதியில் 7 அடி அகல பள்ளிச்சுவர் மதிற்சுவருக்கும் இடையில் உள்ள 8 அடி 6 அங்குல இடைவெளியில் 7 அடி 6 அங்குல அகலமுள்ள லொறி ஒன்று கடந்து சென்ற பொழுது மதிற்சுவருடனிருந்து கற்தூணை முட்டித் தள்ளியதால தூணுக்குப் பின் நின்ற 12 வயசுச் சிறுவன் தூணின் இடிபாடுகளுக்குள் அகப்பட்டு மரணமானான்.

யாழ்ப்பாணம் முஸ்லிம் வீதியைச் சேர்ந்த அப்துல் அஸீஸ் என்பவரின் மகன் முகமத் மஜீத் என்பவரின் மரணம் சம்பந்தமாகத் திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் நடத்திய மரணவிசாரணையின் போது இவ் விபரம் தெரிவிக்கப்பட்டது.

ஷகீத் என்னும் 12 வயதுச் சிறுவன் சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது:

சம்பவதினம் காலை 7 மணியளவில் மஸ்ரஉத்தீன் பாடசாலைப் பிள்ளைகள் சுற்றுப்பிரயாணம் புறப்பட்டபடியால் அங்கு வேடிக்கை பார்க்கச் சென்றேன். பாடசாலை வாசலுக்கு அருகில் ஒரு பஸ் நின்றது. அதில் ஆட்கள் இருக்கவில்லை. அச்சமயம் ஒரு லொறி வந்து பஸ்ஸுக்கும் வாசல் தூணுக்கும் இடையால் தாண்டிச் சென்றது. லொறியின் பின்பக்கம் பாடசாலை வாசல் தூணில் மோதியது. தூணுக்கு அப்பால் நின்ற மஜீத் தூண் விழுந்து நசுக்கப்பட்டார். ஆட்கள் அவரை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்சென்றனர். தூண் கற்கள் என்மீதும் வந்துவிழுந்தன.

லொறிச் சாரதி எம். எம். அலீஸ் 1000 ரூபாய் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டு 6-ந் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு மரணவிசாரணை அதிகாரி உத்தரவிட்டார்.

ஜன நெருக்கடி மிகுந்த இடத்தில் லொறிகள் செல்வதற்குத் தடைவிதிக்கப்பட வேண்டுமென மரணவிசாரணை அதிகாரி தெரிவித்தார்.

## 'சமஷ்டி . . .'

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழரசுக்கட்சிக்கும் உடன்பாடு ஒன்று இருந்தது. சுதந்திரக்கட்சி ஆட்சிக்கு வந்ததும் நன்மை கிடைக்குமென்று மக்களும் நம்பினர்கள். நாமும் அந்த உடன்பாட்டின் அடிப்படையில் உரிமை பெறுவதற்கு பல வகையாலும் முயற்சி செய்தோம். யாவும் தோல்வியடைந்துவிட்டன, நன்மை கிடைக்காது என்பது இப்பொழுது தெளிவாகிவிட்டது. எனவே இதை தமிழ் பேசும் மக்கள் உணரவேண்டுமென்பதற்காகவும் புதிய போராட்டத்திற்கு மக்களைத் தயார் செய்வதுடன் மக்களின் அதிகாரத்தையும் பெறவேண்டுமென்பதற்காகவும் பதவி துறந்து மீண்டும் போட்டியிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உடனிருந்து வாழும் சமஷ்டி அமைப்பை சிங்கள மக்களும் அரசாங்கமும் விரும்பாவிட்டால் தனிநாடு கோருவதா என்பதைத் தீர்மானிப்பதுவும் தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமையாகும்.


REGAL — JAFFNA

NOW SHOWING

Daily 3 Shows. Sats & SunsFour

Richard Widmark

in

The Secret Ways

(World War -2 Story)


## "குருஷ்சேவை கொல்லுங்கள்"

ஸ்டாக்ஹோம், ஜூன் 23

"குருஷ்சேவைக் கொலை செய்ய ஒப்படையுங்கள்" என கோரும் கம்யூனிஸ்ட் எதிர்ப்பு துண்டுப் பிரசுரங்கள் இங்கு விநியோகிக்கப்பட்டன. பொலிஸ் அறிவிப்பைப் போன்று குருஷ்சேவின் முகம் முழுப்பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

"உக்ரெயினில் 4 லட்சம் பேர் உயிரிழப்பதற்கு குருஷ்சேவ்தான் காரணம். வெட்கம் கெட்ட பெர்லின் சுவரை எழுப்பியது இந்த ஆசையில்தான்" என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

## பிரபல என்ஜினியர் விபத்தில் மரணம்!

டப்ளின், ஜூன் 23

உலகப் பிரசித்தி பெற்ற என்ஜினியரான வில்லியம் ஜேமண்ட் பிரிட்ஸ்-ஜெரால்ட் இங்கு கார் விபத்தொன்றில் மாண்டார். 74 வயதான அவருக்கு இந்தியாவில் வங்காள-நாகபுரி ரயில்வேயில் அவர் செய்த சேவைக்காக 1947-ம் ஆண்டு அவருக்கு சர் பட்டம் வழங்கப்பட்டது.

## கம்பராமாயண சித்திரப் போட்டி

யாழ்ப்பாணம், புதன்

இலங்கை கம்பன் கழகம் நடத்திய கம்பராமாயண சித்திரப்போட்டிக்கு அனுப்பப்பட்ட சித்திரங்கள் நீதிபதிகளின் இறுதிப் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கின்றன.

இப்போட்டியில் முதலிடம் பெறுபவர்க்கு உடுவில் பாராளுமன்ற உறுப்பினர் திரு வி. தருமலிங்கம் அளிக்கும் டாக்டர் 'பி. எஸ்' நினைவுத்தங்கப் பதக்கமும், இரண்டாவது இடம் பெறுபவர்க்கு, யாழ்ப்பாணம் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் அளிக்கும் 'சி. செலிசம்மா' நினைவு வெள்ளிப்பதக்கமும், மூன்றாவது இடம் பெறுபவர்க்கு தனலக்ஷ்மி புத்தகாலயத்தார் அளிக்கும் ரூ. 25 பெறுமதியான புத்தகங்களும் பரிசில்களாக அளிக்கப் படவிருக்கின்றன.

இப்பரிசில்கள் இம்மாதம் 27-ம் திகதி நடைபெறும் கம்பன் விழாவில் யாழ். மாநகர முதல்வரால் வழங்கப்படும்.

பஸ் நிலையம்

## "நாம் என்ன செய்வது?"

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணத்திலுள்ள தற்போதைய பஸ் நிலயத்தை மாற்றி புதிய பஸ் நிலயம் அமைப்பதை முன்னிட்டு பிரயாணிகள் தங்குமிடம் முழுமையாக அகற்றப்பட்டு விட்டதால் பிரயாணிகள் தங்குவதற்கு இடமில்லாமலும், வெப்பத்தின் கொடுமை தாங்க முடியாமலும் கஷ்டமனுபவிக்கின்றனர். நேற்றும் இன்றும் நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோவிலுக்குப் போவதற்காகக் காத்துநின்ற பிரயாணிகள் பஸ் நிலயத்தில் தங்க வசதியில்லாமல் அங்குமிங்குமாக அலைந்தனர்.

இது சம்பந்தமாக பஸ் நிலயத்திலுள்ள அதிகாரி ஒருவரை நமது நிருபர் கேட்டதற்கு, "பிரயாணிகள் மட்டுமா கஷ்டப்படுகிறார்கள்? நாங்களும் தானே கஷ்டப்படுகிறோம். வெய்யிலுக்குள் நின்றபடிதானே நமது நேரக் கணிப்பாளர்கள் வேலை செய்கிறார்கள். எல்லாமே மாநகரசபையின் கட்டளை; நாம் என்ன செய்ய முடியும்?" என்றார்.


## திருமண அழைப்பு

திரு. ந. கா. நல்லதம்பி அவர்களின் புத்திரி திருநிறைச் செல்வி விஜயலட்சுமி அவர்களுக்கும் திரு. மயில்வாகனம் மாணிக்கவாசகர் அவர்களின் புத்திரன் திருநிறைச்செல்வன் டாக்டர் இராமநாதன் அவர்களுக்கும் நிகழும் குரோதிவருடம் ஆனி மாதம் 13-ம் திகதி (26-6-64) வெள்ளிக்கிழமை பிற்பகல் 5-40—6-40 மணிவரை வரும் சுபமுகூர்த்தத்தில் மணமகள் இல்லத்தில் நடைபெறும் திருமணவைபவத்தில் உறவினர்களையும் நண்பர்களையும் சமுகம்தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

ந. கா. நல்லதம்பியும் பாரியாரும். திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம். 537


## இராணுவத் . . .

(1-ம் பக்கத்தொடர்ச்சி

டது. இராணுவ சிப்பாய்களால் தாக்கப்பட்டவர்கள் பொலிஸ் நிலயத்திற்குச் சென்றபோது அங்குள்ள பொலிஸ் உத்தியோகத்தர்கள் வாக்குமூலங்களைப் பதிவு செய்ய மறுத்தார்களென்றும் தெரிவிக்கப்பட்டது.

இவ்விசாரணையின் போது பட்டினசபைக் காரியாலயத்தின் வெளியே பெண்கள் உட்பட ஏராளமானோர் திரண்டிருந்தார்கள்.

பருத்தித்துறை எம். பி. திரு. துரைரத்தினம், வல்வெட்டித்துறை பட்டினசபைத் தலைவர் திரு. க. சபாரத்தினம், வடமராட்சி காரியாதிகாரி திரு. ஜே. டி. ஆர்னுல்ட், வல்வெட்டித்துறை சுங்க தடை அதிகாரி திரு. ராஜசங்கரி, பலாலி இராணுவ அதிகாரி திரு, ரோலஸ், வல்வெட்டித்துறை பொலிஸ் இன்ஸ்பெக்டா திரு. ஜோகர்னஸ் ஆகியோர் விசாரணையின்போது சமுகமளித்திருந்தனர்.

விசாரணை முடிவில் இராணுவத்தினரால் சேதமடைந்த இடங்களை திரு. நெவில் ஜெயவீரா பார்வையிட்டார்.

எல்லா முறைப்பாடுகளையும் பதிவு செய்துகொண்ட பின்னர், தக்க நடவடிக்கை எடுப்பதாக அரசாங்க அதிபர் வாக்குறுதியளித்தார்.

## துப்பாக்கிப் பிரயோகம் மீண்டும் ஆரம்பம்

புதுடில்லி, ஜூன் 23

கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை காஷ்மீரின் மூன்று பகுதிகளில் பாகிஸ்தான் துருப்புகள் இந்தியத் துருப்புகள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதன் விளைவாக ஒரு இடத்தில் இரு கான்ஸ்டபிள்கள் கொல்லப்பட்டனர். பாகிஸ்தான் துருப்புகள் மீது இந்தியத் துருப்புகள் தற்பாதுகாப்புக்காக துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒரு பாகிஸ்தான் வீரர் கொல்லப்பட்டார்.

இது சம்பந்தமாக ஐக்கிய நாடுகள் பார்வையாளர்களிடம் இந்தியா புகார் தெரிவித்துள்ளது.


## மரண அறிவித்தல்

வே. இராமலிங்கம்

சங்கானையைச் சேர்ந்த திரு. வே. இராமலிங்கம் ஆச்சாரி அவர்கள 23-6-64 செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார். 24-6-64 புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரின் பூதவுடல் சங்கானையில் அவர் இல்லத்தில் இருந்து எடுத்துச் சென்று விழாவெளி மயானத்தில் தகனம் செய்யப்படும். உறவினர்களும் நண்பர்களும் இச் செய்தியை ஏற்றுக்கொள்ளும்படி கேட்கப்படுகின்றனர்.

தகவல் கொடுப்பவர்: இ. கந்தையா. 541